புதுச்சேரி அரசு
வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை

## உர விற்பனைகளுக்குண்டான சுற்றறிக்கை

மத்திய அரசின், உர அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி நாடு முழுவதும் உள்ள சில்லரை உர விற்பனையாளர்களுக்கு உரம் விற்பனை செய்ய POS இயந்திரத்தை விநியோகம் செய்து அதன் மூலம் உரம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது என்பது நாம் அறிந்ததே. அவ்வாறு, புதுச்சேரி மாநிலத்திலும், அனைத்து சில்லரை விற்பனையாளர்களுக்கு POS இயந்திரங்கள் வழங்கப்பட்டு அதனை செயல்படுத்தும் முறையினையும் பயிற்சி கொடுத்து உர விற்பனை செய்யப்படுகின்றது என்பதும் நாம் அறிந்ததே.

இருப்பினும், சமீபகாலமாக ஒரு சில சில்லரை உர விற்பனையாளர்கள், அவரவர்களுக்கு வழங்கப்பட்ட POS இயந்திரங்களை பயன்படுத்தாமல், நேரடியாக உரம் விற்பனைசெய்கிறார்கள் எனபுகார்கள் வருகின்றன. எனவே, அனைத்து உர விற்பனையாளர்களும், உரங்களை மொத்த விற்பனையாளர்களிடம் வாங்கிய பின் அதனை தங்களின் POS இயந்திரத்தில் பதிவேற்றம் செய்யவும், மற்றும் தங்களிடம் உள்ள உர இருப்பு பதிவேட்டிலும் பதிவு செய்யவும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தொடர்ச்சியாக, விற்பனை செய்யப்படும் அனைத்து உரங்களும், கண்டிப்பாக, அவரவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள POS இயந்திரங்கள் மூலமாகவே விற்பனை செய்யப்பட வேண்டும் என அறிவுறுத்தபடுகின்றது. மத்திய அரசாங்கத்தின் விதியினை மீறி POS இயந்திரங்கள் மூலமாக உர விற்பனை செய்யாதவர்களின் உர விற்பனை உரிமம் ரத்து செய்யப்பட்டு சட்ட பூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், அவர்களிடம் இருக்கும் POS இயந்திரம் பறிமுதல் செய்யப்படும் என்பதை இதன் மூலம் தெரியப்படுத்திக்கொள்கிறோம்.

வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை இயக்குநர்
புதுச்சேரி